கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.4/2016

பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **கலையரசி** | தொழில் | |
| கணவர் பெயர் | **தங்கவேல்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 19.09.2023 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

பி.வா.சா.1 கலையரசி தரப்பில் முதல் விசாரணை பிரமாண நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

நான் வழக்கின் 2ம் பிரதிவாதி. என் தரப்பில் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரிதான். நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன.

1. பி.வா.சா.ஆ.3 – 08.02.2010ம் தேதியில் 3ம் பிரதிவாதி பானுப்பிரியாவுக்கு ஆறுமுக கவுண்டர் எழுதி வைத்த உயில் சாசனம் அசல்

(மேற்படி ஆவணத்தை இந்த சாட்சியின் மூலமாக குறியீடு செய்ய முடியாது என்றும், உயிலின் பயனீட்டாளாரான 3ம் பிரதிவாதி மூலமாக தான் குறியீடு செய்யப்பட வேண்டும் என்றும் வாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சி அந்த உயிலின் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றும், 3ம் பிரதிவாதி இந்த சாட்சியின் மகள் என்றும் அதனால் மேற்படி உயில் ஆவணத்தை இந்த சாட்சியின் மூலமாக குறியீடு செய்ய ஆட்சேபணை ஏதும் இருக்க முடியாது என்றும் வாதிட்டார். மேற்படி சாட்சி மூலமாக உயில் ஆவணத்தை குறியீடு செய்ய முடியாது என்பதற்கு முன்தீர்ப்புகள் உள்ளன என்றும், அவற்றை தாக்கல் செய்வதாகவும் வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார், எனவே மேற்படி முன்தீர்ப்புகள் தாக்கல் செய்வதற்காகவும், மேற்படி உயில் ஆவணம் குறியீடு செய்வதற்காகவும் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.09.19 17:32:51 +0530

Additional District Judge,

**Dindigul.**